டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.10.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 093 - Madurai | Online Edition

# உழவர் நல நிதியின் 18 வது தவணை சுமார் ரூ.20,000 கோடி விடுவித்தார் பிரதமர்

புது தில்லி, அக்.5

பிரதமர் நரேந்திர மோடி மகாராஷ்டிரா மாநிலம் வாஷிமில் ரூ.23,300 கோடி மதிப்பிலான வேளாண் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை தொடர்பான பல்வேறு முன்முயற்சிகளை நேற்று தொடங்கி வைத்தார். பிரதமரின் உழவர் நல நிதியின் 18 வது தவணையை வழங்குதல், நமோ விவசாயிகள் பெருங் கவுரவ நிதி திட்டத்தின் 5-வது தவணையைத் தொடங்குதல், வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின் கீழ் 7,500க்கும் மேற் பட்ட திட்டங்களை அர்ப்பணித்தல், 9,200 உழவர் உற்பத்தி யாளர் அமைப்புகள், மகாராஷ்டிரா முழுவதும் மொத்தம் 19



மெகாவாட் திறன் கொண்ட ஐந்து சூரிய பூங்காக்கள் மற்றும் கால்நடைகளுக்கான ஒருங்கிணைந்த மரபணு சிப் மற்றும் உள் நாட்டு பாலின வகைப்படுத்தப்பட்ட விந்து தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இந்த முன்முயற்சிகளில் அடங்கும்.

நிகழ்ச்சியில், சுமார் 9.5 கோடி விவசாயிகளுக்கு சுமார் ரூ.20,000 கோடி மதிப்பிலான பிரதமரின் உழவர் நல நிதியின் 18-வது தவணை விடுவிக்கப்பட்டதை எடுத்துரைத்த பிரதமர், மாநில அரசு தனது விவசாயிகளுக்கு இரட்டைப் பலன்களை வழங்க பாடுபடுகிறது என்றார். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த 90 லட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.1900 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நமோ விவசாயிகள் பெருங்கவுரவ நிதி திட்டம் குறித்தும் மோடி குறிப்பிட்டார். உழவர் உற்பத்தியாளர் அமைப்பு களுக்காக பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங் களை அர்ப்பணித்ததாக அவர் குறிப்பிட்டார். இன்று பெண் சகோதரி திட்டத்தின் பயனாளி களுக்கு நிதியுதவி வழங்கியது பற்றிப் பேசிய பிரதமர், இந்தத் திட்டம் மகளிர் சக்தியின் திறன்களுக்கு அதிகாரம் அளிக்கிறது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

# மழைக்கு முன் மரங்களை நட்டு பயன்பெறுவீர்!

திருச்சி, அக்,5

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மரம் நடுதலை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. தேக்கு, சந்தனம், வேங்கை, இலவம், சவுக்கு, மகோ கனி, செஞ்சந்தனம், குமிழ் தேக்கு போன்ற மரக்கன்றுகள் சிறுக மணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வழங்கப்பட உள்ளது. மேலும், மரம் வளர்ப்பு பற்றிய கருத்துகள் மற்றும் தகவல்கள் தெரிவிக்கப்படும். எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் அலுவலக நேரத்தில் (காலை 10 மணி முதல் மாலை 5 மணி) வரை வேளாண்மை அறிவியல் நிலையத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832, 88381 26730 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும். குறிப்பு : மரக்கன்றுகள் பெற ஆதார் மற்றும் அடங்கல் ஆகிய வற்றின் நகல் கட்டாயம் கொண்டு வரவும்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# மலர்களில் மதிப்புகூட்டுதல் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், அக்.5

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வருகின்ற 9.10.24 புதன்கிழமை அன்று மலர்களில் மதிப்புகூட்டுதல் பற்றிய ஒரு நாள் பயிற்சி நடைபெறும். இதில் பொதுமக்கள், அறிவியல் மாணவர்கள், புதிய தொழில் முனைவோர்கள் மற்றும் மகளிர் கலந்து கொண்டு பயன் பெறலாம். இந்த பயிற்சியின் முக்கிய நோக்கமாக, பலவகைப்பட்ட மதிப்புகூட்டப் பட்ட மலர் பொருட்களான பூமாலை, ஜடைபட்டி, நிறமேற்றப்பட்ட மலர்கள், மலர்களை கொண்டசெய்யப்படும் கைவினைப் பொருட்கள் போன்றவற்றை குறித்த தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

| வ. எண். | விவரங்கள் | பயிற்சி பற்றிய தகவல் |
|---|---|---|
| 1. | பயிற்சியின் தலைப்பு | மலர்களில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி |
| 2. | தேதி | 9.10.24 (புதன்கிழமை) |
| 3. | நேரம் | காலை 10 முதல் மாலை 4.30 வரை |
| 4. | பயிற்சி கட்டணம் | ரூ.1000 (மதிய உணவு மற்றும்தேநீர்) |

தொடர்புக்கு முனைவர் சு.கார்த்திகேயன் (99654 35081), முனைவர் இரா.சித்ரா (99427 66922), மலரியல்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003.

பதிவு செய்வதற்கு கடைசி நாள் 8.10.2024 (செவ்வாய்க் கிழமை) மாலை 5.00 மணி வரை.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணம்



இராமநாதபுரம், அக்.5

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டார வேளாண்மைத் துறையின் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் உள்மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா பயறுவகைப் பயிர்களில் ஒருங் கிணைந்த பயறு மேலாண்மை என்ற தலைப்பில் பயறுவகை பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்திதிறன் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பயறுவகை பயிர்கள் உற்பத்தி தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்வதற்காக புதுக்கோட்டை மாவட்ட வம்பன் தேசிய பயறுவகை பயிர்கள் ஆராய்ச்சி மையத்திற்கு மண்டபம் வட்டார விவசாயிகளை அழைத்துச்செல்லப்பட்டது.

ஆராய்ச்சி நிலையத்தில் பேராசிரியர் மற்றும் தலைவர் யுவராஜா வம்பன் பயிர் வகை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட பயறு ரகங்கள் அவற்றின் குணாதிசயங்கள் பட்டத்துக்கு ஏற்ற ரகங்கள் தேர்வு, விதை பண்ணை அமைப்பதற்கான வழிமுறைகள் பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்து கூறினார். பயிற்சியில் வேளாண் விரிவாக்கத் துறை தொழில்நுட்ப உதவியாளர் இராதாகிருஷ்ணன் குறைந்த செலவில் அதிக மகசூல் தரக்கூடிய உளுந்து பயிர் சாகுபடி செய்து விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளுமாறு கூறினார். மேலும் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்து கூறினார். உதவி பேராசிரியர் முனைவர் ராம்ஜெகதீஸ், பயறு வகைப் பயிரில் நோய் மேலாண்மை குறித்து விரிவாக விளக்கம் அளித்தார். இந்த கண்டுணர்வு பயண ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் பானுமதி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் மா.பவித்ரன் செய்திருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 05.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 34 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 42 | 46 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 64 |
| 2 | வெண்டை | 30 | 35 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 55 | 60 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 55 | 60 | 60 | கேரட் | 48 | 52 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 58 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 45 |
| 6 | புடலை | 20 | 25 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 24 | 28 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 26 | 30 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 34 | 69 | இஞ்சி | 50 | 130 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 48 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 100 | 110 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 45 | 52 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 46 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 60 | 68 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 120 | 130 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 45 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 130 | 200 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 40 | 70 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 55 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 65 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 16 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 35 | | | | |

# கரும்பு விவசாயிகள் குழுவிற்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி விவசாயிகள் பயிற்சி



திருச்சி, அக்.5

அட்மா திட்டத்தின் கீழ் கரும்பு விவசாயிகள் குழுவிற்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி விவசாயிகள் பயிற்சி திருச்சிராப் பள்ளி மாவட்டம், மேட்டுப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் சுகுமார் பேசுகையில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் நெல் விதை சம்பா பருவம் விநியோகம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், மண்வளம் அட்டை திட்டம் மானிய திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். கோத்தாரி சர்க்கரை ஆலை இருந்து முருகேசன், உதவி கரும்பு மேலாளர் பேசுகையில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையானது கரும்பு நடவில் கரணைகளுக்கு பதிலாக கரும்பு விதைப் பருக்களை குழி தட்டுகளில் தேங்காய் நார் கழிவுடன் சேர்த்து நிரப்பி நிழல் வலையில் நாற்றங்கால் அமைத்து வளர்ந்த நாற்றுகளை கொண்டு கரும்பு நடவு செய்யும் முறையாகும் சாதாரண முறையில். ஏக்கருக்கு 3 முதல் 4 டன் அளவிலான கரும்புகளை உபயோகிக்க வேண்டும். ஆனால் இம்முறையில் ஏக்கருக்கு 6000 நாற்றுகள் மட்டுமே போதும் முளைப்புத்திறனையும் பயிர் எண்ணிக்கையும் அதிகப் படுத்தலாம் எளிதாக எடுத்துச் செல்லலாம். தண்ணீர் மற்றும் உறக்கத்தின் உபயோகிப்புத்திறன் கூடுகிறது. தூர்களின் எண்ணிக்கை கரணை நடவு முறை விட அதிகம், ஊடு பயிர் செய்யப்படுவதன் மூலம் கூடுதல் வருமானம், காற்று மற்றும் சூரிய ஒளி சீராக கிடைப்பதால் கூடுதலாக உருவாகும் கரும்புகள் அனைத்தும் நீளமான நிமிர்ந்த அதிக எடை கொண்ட கரும்பு களாக கிடைக்கும். ஒரு மாத கால வயதுடைய நாற்றுகளை நடவு செய்வதன் மூலம் பயிர்சாகுபடி காலம் குறைவு, நான்கரை அடி பார் இடைவெளி என்பதால் குறைந்த செலவில் இயந்திரம் கொண்டு மண் அணைத்தல் மற்றும் கரும்பு அறுவடை செய்ய லாம் மேற்கண்ட முறைகளில் பாசனம் அமைத்து கரும்பு சாகுபடி செய்வதால் நீர் பாசனம் அளவு குறைத்து நீர் சேமிக்கப் படுகிறது. உதவி வேளாண்மை அலுவலர் எடிசன் பேசுகையில்

வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். பயிற்சியில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் பேசுகையில் அட்மா திட்ட செயல்பாடுகள், கண்டுணர்வு சுற்றுலா விவசாயிகள் பயிற்சி, செயல் விளக்கங்கள் பற்றி விளக்கி கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் பேசுகையில் உழவன் செயலி பற்றி விளக்கி கூறி விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்து கொடுத்தார். பயிற்சிக் கான ஏற்பாட்டினை நெப்போலியன் கரும்பு இன்ஸ்பெக்டர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் ராஜரெத்தினம் ஆகியோர் செய்திருந்தனர்.



# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் செயல்பாடுகள் - ஓர் பார்வை

விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை வேளாண்மைத் துறையின் சகோதரத்துறை ஆகும்.

இது குறித்து கடலூர், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை உதவி இயக்குநர் சே.விஜயா, கூறுகையில் வேளாண்மைத்துறை, தனியார் உற்பத்தியாளர்கள் அமைக்கும் விதைப்பண்ணை பதிவுகளை அங்கீகரித்து, வயலாய்வு மேற்கொண்டு விதைச்சான்றளிப்பு செய்து வருகிறது. சான்றுப் பெற்ற தரமான விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு கொடுப்பதே முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் பெறப்படும் புதிய இரகங்களின் வல்லுநர் விதைகளை ஆதார விதைகளாகவும் அதிலிருந்து சான்று விதைகளாகவும் விதைப்பெருக்கம் செய்யப்படுகிறது. இதனால் புதிய இரகங்களின் விதை உற்பத்தி சங்கிலி உடையாமல் பல வருடங்களுக்கு விவசாயிகளை சென்றடைகிறது. கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2366 ஹெக்டர் நெல் தானியங்கள், சிறுதானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், விதைப்பண்ணை அமைக்கப்பட்டு 1841 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிப்பு செய்து வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டு இது நாள் வரை 1090 ஹெக்டர் விதைப்பண்ணை அமைக்கப்பட்டு 1200 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

நஞ்சற்ற உணவு தானியங்கள், காய்கறிகளை உற்பத்தி செய்யும் பொருட்டு தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை செயல்பட்டு வருகிறது. தேசிய உயிர்ம உற்பத்தி திட்டம், பங்களிப்பு உத்திரவாத திட்டம் மூலம் விவசாயிகளுக்கு உயிர்மச் சான்றளிப்பு வழங்கப்படுகிறது. இத்துறை மூலம் நமது மாவட்டத்தில் ஏறக்குறைய 750 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்.

இது பற்றி மேலும் தகவல் அறிய விதைச்சான்றளிப்பு (ம) உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகம், 2-ம் தளம், வேளாண்மைஇணை இயக்குநர் வளாகம், குண்டுசாலை, செம்மண்டலம், கடலூர் - 607 001 தொடர்பு கொள்ளலாம்.



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வேளாண் அதிகாரி ஆய்வு



கள்ளக்குறிச்சி, அக்.5

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் திட்ட பணிகளை மண்டல அலுவலர் கோப்பெருந்தேவி, வேளாண்மை துணை இயக்குநர், சென்னை ஆய்வு செய்தார்.

கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலைய விதை சேமிப்பு கிடங்கினை ஆய்வு செய்து கட்டுமான பணியினை விரைவாக முடித்திட அறிவுறித்தினார். விதை சுத்திகரிப்பு நிலையத்தில் பெறப்படும் நெல், உளுந்து, சிறுதானிய விதைகளை உடனுக்குடன் சுத்திகரிப்பு செய்து சான்றட்டை பொருத்தி விவசாயிகளுக்கு உடன் தட்டுப்பாடு இன்றி விநியோகம் செய்திட அறிவுறித்தினார். வடக்கனந்தல் அரசு விதைப்பண்ணையில் சாகுபடி செய்துள்ள நெல் ஏடிட்டி 53, பாரம்பரிய நெல் ரகமான கருங்குறுவை மற்றும் தக்கை பூண்டு விதை உற்பத்தி வயலை ஆய்வு செய்து பூச்சி விரட்டிகளான நொச்சி மற்றும் ஆடுதொடா நாற்றங்காலை பார்வையிட்டு பருவ மழைக்கு முன்பே விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட அறிவுறித்தினார்.

சின்னசேலம் மற்றும் கள்ளக்குறிச்சி வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள மணிலா மற்றும் உளுந்து விதைப்பண்ணை விவசாயிகளிடம் கலந்துரையாடி மணிலாவிற்கு எக்டருக்கு 400 கிலோ அளவில் ஜிப்சம் மற்றும் உளுந்து பயிரில் பூக்கும் பருவத்தில் 2 சதவீத டிஏபி கரைசல் தெளித்து அதிக மகசூல் பெற்றிட விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். மணிலா பயிரிட்டுள்ள அனைத்து வயல்களிலும் வரப்பு பயிராக பயறு வகை பயிர்களான உளுந்து, துவரை பயிர்களை பயிரிட அறிவுரை வழங்கினார்.

சின்னசேலம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்கும் போது கட்டாயம் விற்பனை முனைய கருவி (POS Machine) மூலம் பட்டியலிட்டு

பணமில்லா பரிவர்த்தனை செய்திட கேட்டுக்கொண்டார். மண் ஆய்வு கூடத்தை ஆய்வு செய்து மண் பகுப்பாய்வில் அறியப் படும் பிரச்சனைக்குரிய மண் கொண்ட விவசாயிகளுக்கு பயிர் ரக தேர்வு மற்றும் தகுந்த உர மேலாண்மை தொழில்நுட்பத்தை வேளாண் துறை அலுவலர்கள் மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்து வட்டார அலுவலர்களுக்கான ஆய்வுகூட்டத்தில் கலந்து கொண்டு இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வேளாண் திட்டங்களை களப்பணியாளர்கள் வாரியாக ஆய்வு செய்து திட்டப்பணிகளை செவ்வனே விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு சாதனை அடைந்திட அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

இவ்வாய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் அசோக் குமார், வேளாண்மை துணை இயக்குநர் (திட்டங்கள்) பெரியசாமி, வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஜயராகவன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) அன்பழகன் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள் ஆய்வில் கலந்து கொண்டனர்.



# தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோயின் அறிகுறி? கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் என்ன?



தென்னை மரங்களில் இரு வகையான வாடல் நோய் தாக்கும். அவற்றில் இதுவும் ஒன்று, கோனோடெர்மா லூசிடம் 'என்ற காளான் வகை பூஞ்சானத்தால் தாக்குகிறது. இந்த தஞ்சாவூர் வாடல் நோயானது அடிதண்டு அழகல் நோய் என்றும் அழைக்கப்படுவதும் உண்டு. இந்த நோயினை இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1913ஆம் ஆண்டிலே பட்லர் என்பவரால் கண்டறியப்பட்டது. தமிழகத்தில் 1952யில் ஏற்பட்ட புயலுக்கு பின், அதிக அளவாக தஞ்சாவூர் பகுதியில் உள்ள தென்னந்தோப்புகளில் கண்டறியப்பட்டதால் இதற்கு தஞ்சாவூர் வாடல் நோய் (TANJORE COCONUT WILT DISEASE) என பெயர் வந்தது.

இந்த நோய் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு மண் மற்றும் நீர்ப்பாசன மூலமாக பரவுகிறது. இதனுடைய வித்துகள் மண்ணில் தங்கி நீண்டகாலம் வாழும் தன்மை உடையது.

தமிழகத்தில் மட்டுமல்லாது வெளிமாநிலங்கள், வெளி நாடுகளிலும் இந்த நோய் தாக்குதல் உள்ளது. தமிழகத்தில் மட்டுமே 4 லட்சம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி உள்ளது குறிப்பிடத்தக்கது.

### நோயின் அறிகுறிகள்

1) மரத்தின் ஓலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகி, அடி மட்டைகள் எல்லாமே பழுப்படைந்து காய்ந்து மரத்தோடு ஒட்டித் தொங்கும். இதை இழுத்தால் கையோடு வாரது. இது (ஆரம்ப நிலைக்கான அறிகுறிகள்).

2) அடி மரத்திலிருந்து 3 அடி உயரம் வரை செம்பழுப்பு சாறு வடியும்.

3) தென்னை மரத்தின், குரும்பை களும் காய்களும் உதிரும்.

4) காளான்கள் மரத்தில் காணப்படும். இது முற்றிய நிலையாகும்.

5) இவை அனைத்தும் ஒருங்கே காணப்பட்டால் 6 மாதம் முதல் 1வருடத்திற்குள்ளே மரம் முற்றிலுமாக இறந்து விடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

1) மரத்தை சுற்றி டி.விரிடி 200 கிராம்+பேசில்லஸ் சப்டிலிஸ் 100 கிராம் இவற்றுடன் மக்கிய சாண எரு 50 கிலோ கலந்து இடலாம். அத்துடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு மரத்திற்கு அடியில் இடலாம்.

2) ஹெக்சா கோனசால் 2 மிலி + 100 மிலி தண்ணீர் கலந்து வேரில் 3 மாதத்திற்கு ஒரு முறை கட்ட வேண்டும்.

3) 1% போர்டோ கலவையை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து மரத்தை சுற்றி நன்றாக நனையுமாறு ஊற்ற வேண்டும்.




4) தென்னந்தோப்புகளில் வாழையை ஊடுபயிராக பயிடுவதன் மூலமாக இந்த நோய் தாக்கத்தை குறைக்கலாம்.

5) மரத்திற்கு வாய்க்கால் பாசனம் வழியாக நீர்ப்பாசன செய்யாமல் சொட்டுநீர் பாசனம் செய்ய வேண்டும்.

6) நோய் தாக்கி இறந்த மரங்களை உடனடியாக வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

எனவே தற்போது தென்னைக்கு நல்ல எதிர்காலமாக தேங்காய் விற்பனை விலை கூடுதலாக கிடைக்கிறது. எனவே பராமரிக்க முடியாத தென்னைந்தோப்புகளை நன்றாக பராமரிக்க வேண்டும். பெற்ற பிள்ளை கஞ்சி ஊற்றாவிட்டாலும் கூட நாம் தோப்பில் வளர்த்த தென்னம்பிள்ளை காப்பாற்றும் என்ற நம்பிக்கையுடன் பராமரிப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நானோ யூரியா பிளஸ்

**20 சதவீதம்**

**தழைச்சத்து கொண்ட நானோ திரவம்**

500 மிலி
ரூ.225/-




இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி

- ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
- முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
- இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
- அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.



# புகையான் பூச்சி மற்றும் இலைச்சுருட்டுப் புழுவின் தாக்குதலில் இருந்து நெற்பயிரை காப்பாற்றும் வழிமுறைகள்



மதுரை, அக்.5

மதுரை மாவட்டத்தில் குறிப்பாக வீரபாண்டி, தவசிப்புதூர், காயாம் பட்டி மற்றும் குலமங்கலம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள ஆர்.என். ஆர் 15048, ஜே.ஜி,எல் 1798, கே.என்.ஆர்.எம் 1638 மற்றும் ஐ.டபிள்யுஜி பொன்னி ஆகிய நெற்பயிர்களில் புகையான் பூச்சி மற்றும் வெண்முதுகு தத்துப்பூச்சி ஆகியவற்றின் தாக்குதலின் அறிகுறி பரவலாக தென்படுகிறது. மேலும் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதலும் தென்படுகிறது.

இதன் தாக்குதலின் தீவிரத்தை முனைவர் கி.சுரேஷ் இணைப் பேராசிரியர் (பூச்சி யியல்) மற்றும் முனைவர் மனோண்மணி இணைப் பேராசிரியர் (பயிர் நோயியல்) மற்றும் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் மதுரை மேற்கு, பார்வையிட்டு புகையான் பூச்சி தாக்குதலில் இருந்து நெற்பயிரை காப்பாற்றும் வழிமுறைகள் குறித்து விளக்கம் அளித்துள்ளனர்.

தற்போது இரவில் வெப்ப நிலை குறைவாகவும் மந்தமான சூரிய வெளிச்சம் இருப்பதினாலும் நெற்பயிரில் பூச்சிகள் அதிகமாக தாக்கியுள்ளது. மேலும் நேரடி நெல் விதைப்பு செய்ததாலும் பயிர்கள் இடைவெளி இன்றி காணப்பட்டதால் இப்பூச்சிகளின் பெருக்கம் அதிகமாக காணப்படுகிறது.

பூச்சிகள் வேர்களின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் பயிர் மஞ்சள் நிறமாக மாறி பின்பு பழுப்பு நிறமாக மாறும். இது தத்துப்பூச்சி எரிப்பு எனப்படும்.

பாதிக்கப்பட்ட வயல்களில் ஆங்காங்கே வட்ட வட்டமாக புகைந் தது போல காணப்படும். இலைச்சுருட்டுப் புழு சுரண்டப்பட்ட பகுதிகள் வெண்மையாக (கண்ணாடி இலைகளாக) மாறி காணப் படுகிறது. அதிக அளவு தாக்கப்பட்ட பயிரில் இலைப் பச்சையம் அரிக்கப்பட்டு இலைகள் வெண்மையான திட்டுகளுடன் காணப் படுவதோடு, பயிர் வளர்ச்சி குன்றி காணப்படுகிறது.

## கட்டுபடுத்தும் முறை

நடவு வயலில் 8 அடிக்கு ஒரு அடி இடைவெளிவிட்டு பாத்தி நடவு செய்தல் வேண்டும். மண்பரிசோதனை பரிந்துரைப்படி தழைச்சத்து இடும் போது3-4 முறையாக பிரித்து இடவேண்டும்.

களைச் செடிகளை அகற்றிவிட வேண்டும். புகையான் பூச்சி தாக்குதலுக்கு எதிர்ப்புத்திறன், தாங்கும் திறன் கொண்ட ரகங் களை பயிரிடலாம்.விளக்குப்பொறி அமைத்து புகையான் பூச்சி களின் நடமாட்டத்தை கண்காணித்து அழிக்கலாம். தேவைக்கு அதிகமாக தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும். வயலில் நன்றாக தண்ணீர் வடிந்த பிறகு மருந்து தெளிக்க வேண்டும்.



### பொருளாதார சேத நிலை அளவு

ஒரு குத்துக்கு 1 சிலந்தி இருக்கும் நிலையில் ஒரு தூருக்கு 2 பழுப்பு தத்துப்பூச்சி இருக்கலாம். கொன்றுண்ணி சிலந்தி இல்லாத நிலையில் ஒரு தூருக்கு 1 தத்துப்பூச்சி என்றும் ஒரு குத்துக்கு ஒரு சிலந்தி என்றளவில் இருக்கும் போது தூருக்கு 2 தத்துப்பூச்சிகள் என்ற எண்ணிக்கையில் இருக்கலாம். தாக்குதல் குறைவாக உள்ள போது ஒரு ஏக்கருக்கு வேப்பெண்ணை 3 சதவிகிதம் (6 லிட்டர்) (அ) இலுப்பை எண்ணை 6 சதவிகிதம் (12 லிட்டர்) (அ) வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிகிதம் (10 லிட்டர்) தெளிக்கவும்.

### மருந்துகள்

பொருளாதார சேத நிலையை எட்டியவுடன் ஒரு ஏக்கருக்கு பியுப்ரோசன் 25% SC 300 மி.லி அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 SL - 40 மி.லி அல்லது பைப்பரினில் 5 SC - 400 மி.லி அல்லது கார்போசல்பான் 300 மி.லி இவைகளில் ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும். மேலும் புகையானின் மறு உற்பத்தியை பெருக்கும் மீதைல்பாரத்தியான் மற்றும்செயற்கை பைரித்ராய்டுமருந்துகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.




### இலைச்சுருட்டு புழுவினைக் கட்டுப்படுத்த வழிமுறைகள்

- முள்ளுள்ள கொப்பு கொண்டு இலை மடிப்புகளைத் திறக்க வேண்டும்.
- இரவு நேரங்களில் விளக்குப் பொறி ஒரு எக்டருக்கு ஒன்று அளவில் பயிரிலிருந்து 20 அடி தூரத்தில் வைத்து அந்துப் பூச்சிளை கவர்ந்து அழிக்கலாம்.
- டிரைக்கோகிரேம்மா கிலோனிய் (முட்டை ஒட்டுண்ணிகளை) பயிர் நடவு செய்து 37, 44 மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை ஒரு தடவைக்கு @ 2சிசி என்ற அளவில் விட வேண்டும்.

● பொருளாதார சேத நிலை அளவினை தாண்டும் போது பேசில்லய் துரின்ஜியன்யியி @ 1 கிலோ, ஹெக்டேர் என்ற அளவில் உபயோகிக்கவும்.

● வேப்பங்கொட்டைச் சாறு 5சதவிகிதம் @ 25 கிலோ, எக்டர் (அல்லது) வேப்பெண்ணை 3 சதவிகிதம் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மிலி) ஆகியவற்றை தெளிக்க வேண்டும்.

● இலைச்சுருட்டுப் புழுவின் தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டினால் இரசாயண பூச்சி கொல்லி மருந்து களான கார்டேப்ஹைட்ரோகுளோரைட் 50% SP 1000 கி / ஹெக்டேர்

● குளோரோட்ரேனிலி புருள் 18.5% SC 150 மி.லி / ஹெக்டேர்

● ப்ளுபெண்டமைட் 20% WG 125-250 கி / ஹெக்டேர்




● இவற்றில் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை ஒரு ஹெக்டேருக்கு 500 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளித்து புழுவினை கட்டுப்படுத்தலாம்

● தழைச்சத்து அதிகமாக இட்ட வயல்களிலும், நிழல் இருக்கும் பகுதிகளிலும், இப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. தழைச்சத்து உரமான யூரியாவை இலை வண்ண அட்டையை பயன்படுத்தி போதுமான அளவில் அல்லது 3 தடவையாக பிரித்து வேப்பம்புண்ணாக்குடன் கலந்து இடவேண்டும்.

● விவசாயிகள் கார்போபியூரான் குருணை மருந்துகள் மற்றும் செயற்கை பைரித்ராய்டு பூச்சி கொல்லி மருந்துகளை உபயோகிப்பதினை தவிர்க்க வேண்டும். இவ்வகை மருந்துகள் பூச்சி தாக்குதலை மேலும் ஊக்குவிக்கும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
1.15% Powder Formulation
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# நெல் தரிசு மற்றும் வீரிய ஒட்டுப் பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி

### நெல் தரிசு பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி

- நெல் தரிசுப் பருத்தி வழக்கமாக 60 x 30 செ.மீ (இரண்டுக்கு ஒரு அடி அதாவது வரிசைக்கு வரிசை இரண்டு அடியும் செடிக்குச் செடி ஒரு அடியும்) என்ற இடைவெளியில் சாகுபடி செய்யப்படுகின்றது.

- மானாவாரி மற்றும் இறவைப் பருத்தியைப் போலவே இதிலும் இரண்டு வரிசைக்கு இடையே ஒரு வரிசையில் ஊடுபயிர் (1:1) சாகுபடி மேற்கொள்ளலாம்.

### வீரிய ஒட்டு பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி

- வீரிய ஒட்டுப் பருத்தியில் பரிந்துரைக்கப்படும் இடைவெளி 90 x 60 செ.மீ அல்லது 120 x 60 செ.மீ. ஆகும்.

- இதில் இரண்டு வரிசைகளுக்கு இடையே கூடுதலாக இடைவெளி இருப்பதால் தாராளமாக இரண்டு வரிசைகளில் கூட ஊடுபயிர் சாகுபடி செய்யலாம் (1:2) அல்லது இணைவரிசை சாகுபடி மூலம் 2:2 விகிதத்தில் இரண்டு பருத்தி வரிசைகளுக்கு இடையே 80 செ.மீ என அமைத்து, அடுத்துள்ள 100 செ.மீ இடைவெளியில் இரண்டு வரிசையில் ஊடுபயிர் சாகுபடி செய்து நல்ல பலன் பெறலாம்.

### ஊடுபயிர் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் விவசாயிகளின் வயலில் முன்னிலை செயல்விளக்கத்திடல் மூலம் பருத்தியில் பயறு வகைப் பயிர்களை ஊடுபயிர் செய்ததால் கூடுதல் பயறு தானிய விளைச்சலாக இறவை மற்றும் மானாவாரியில் எக்டருக்கு முறையே 209 மற்றும் 129 கிலோ கிடைத்தது கண்டறியப்பட்டுள்ளது.

- மொத்த நிகர வருமானமும், ஊடுபயிர் செய்யாத வயல்களை (இறவை ரூ.29,165/எக்டர் மானாவாரி ரூ.20,674 /எக்டர்) ஒப்பிடும் போது ஊடுபயிர் செய்த வயல்களில் (இறவை ரூ. 52,760 / எக்டர், மானாவாரி ரூ. 36,298 / எக்டர் அதிகமாக கிடைத்தது கண்டறியப்பட்டுள்ளது.

- எனவே, கூடுதல் வருமானமாக இறவையில் எக்டருக்கு

ரூ.23,595 மானாவாரியில் எக்டருக்கு ரூ.15,624 கிடைத்தது கண்டறியப்பட்டுள்ளது.

● விவசாயிகள் இருக்கக்கூடிய நீர் மற்றும் நிலவளங்களை முறையாகப் பயன்படுத்தவும், கூடுதல் வருமானம் பெற்றிடவும் பயறுவகைகள், காய்கறிப்பயிர்கள் மற்றும் பசுந்தாள் உரப்பயிர்கள் ஆகியவற்றை ஊடுபயிராக சாகுபடி செய்து பயன்பெறலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.



# விவசாயிகள் ஆலோசனை குழு மற்றும் தொழில்நுட்ப குழு உறுப்பினர்கள் கூட்டம்

கிருஷ்ணகிரி, அக்.5

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டார வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் வட்டார தொழில் நுட்ப குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநரும், வட்டார தொழில் நுட்ப குழுவின் ஒருங்கிணைப் பாளருமான சிவநதி தலைமை தாங்கினார். வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு துணை தலைவர் சுப்பிரமணி சகோதர துறை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களை வரவேற்று பேசினார்.

இக்கூட்டத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிக்குட் பட்ட கிராமங்களில் பயிற்சிகள் நடத்துவது மற்றும் பட்டறிவு பயணம் மற்றும் பயிற்சியில் விவசாயிகளை அழைத்து செல்வது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. வட்டார தொழில் நுட்ப குழு ஒருங்கிணைப்பாளர் சிவநதி கூறியதாவது, தற்போது வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள், சொட்டுநீர் பாசனத்தின் பயன்கள் மற்றும் பயிர் காப்பீடு திட்டத்தின் அவசியம் குறித்து விளக்கி கூறினார்.

மேலும் சகோதர துறை அலுவலர்கள் ஜான்சிராணி மற்றும் நிகிதா (தோட்டக்கலைத்துறை) துறை சார்ந்த மானிய திட்டங்கள் பற்றி விளக்கமளித்தனர். மாரியப்பன் இளநிலை ஆய்வாளர், (பட்டு வளர்ச்சி துறை) துறை சார்ந்த மானிய திட்டங்கள் பற்றி விளக்கமளித்தனர். வட்டார தொழில் நுட்ப ஆலோசனை குழு உறுப்பினர்கள் DAP உரங்கள் மானிய விலையில் கிடைக்க வேண்டி கோரிக்கை முன்வைத்தனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆலோசனை குழு உறுப்பினர்கள் சந்தேகங்களுக்கு அத்துறை சார்ந்த அலுவலர்கள் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்க மளித்தனர், இக்கூட்டத்திற்க்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா செய்து அட்மா திட்டத்தில் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றி விளக்கம் அளித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சூளகிரி வட்டாரம் ஆருபள்ளி கிராமத்தில் வயல்விழா

கிருஷ்ணகிரி, அக்.5



கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம் ஆருபள்ளி கிராமத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்(அட்மா) கீழ் வயல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குனர் ஜான் லூர்து சேவியர் தலைமை தாங்கினார், உதவி தோட்டக்கலை அலுவலர் ராம்குமார், அதியமான் கல்லூரி பேராசிரியர் பழனியப்பன்




ஊராட்சி மன்ற தலைவர் லோகேஷ் மற்றும் முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கூறியதாவது, சிம்பில்திராடி ஊராட்சியானது 2024-25ம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டதின் கீழ் பயனடைய இருப்பதால் விவசாய பெருமக்கள் அனைவரும் வேளாண் துறை மூலம் கொடுக்கப்பட இருக்கும் திட்டங்கள், மானியங்கள், இடுபொருட்கள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்களை வாங்கி பயன் அடைய வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி பேராசிரியர் பழனியப்பன், கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் குறித்து விளக்கி கூறினார்.

வேளாண் பொறியியல் துறை சார்ந்த சங்கீதா விவசாயிகளுக்கு தேவையான இயந்திரங்கள் குறைந்த வாடகையில் குழுவாக இணைந்து வாங்கி பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும் தங்களுக்கு தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு உழவன் செயலியில் முன் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

தோட்டக்கலை துறையை சார்ந்த உதவி வேளாண்மை அலுவலர் ராம்குமார் தோட்டக்கலை துறையில் காய்கறி நாற்றுகள், விதைகள் மானிய விலையில் விநியோகிக்கப் படுகிறது என்றும் கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வி KAVIADP திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், தார்பாலின், பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க் சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார்.




உதவி தொழில் நுட்ப மேலாளர் கா.ம.முஹம்மது ரஃபி உழவன் செயலியின் அவசியம் மற்றும் பதிவிறக்கம் செய்யும் முறைகள், முன் பதிவு செய்யும் முறைகள் குறித்து விளக்கி கூறினார்.

உதவி தொழில் நுட்ப மேலாளர் பழனிசாமி, உயிர் உரங்களின் அவசியம் விதை நேர்த்தி செய்யும் முறைகள் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

மேலும் இவ்விழாவில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர். மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள், தென்னையில் கருந்தலைப்புழுவை கட்டுபடுத்தும் முறைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

இவ்விழாவில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# இப்கோ நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி



சேலம், அக்.5

சேலம் மாவட்டம், ஓமலூரில் உள்ள சரக்கப்பள்ளையூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நானோ உரங்கள் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரி, எஸ்.அருள்மணி, விவசாயத்தில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா திரவ உரங்களின் இலைவழி தெளிக்கும் முறைகள் மற்றும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும் அவர் நானோ திரவ உரங்களைப் பயன்படுத்துவதனால் விவசாயிகளுக்கு உரச்செலவு குறையும் என்றும், சுற்றுசூழல் மாசுபாட்டை தவிர்க்கலாம் எனவும் வலியுறுத்தினார். விவசாயத்தில், ட்ரோன் தொழில்நுட்பம் குறித்தும் ட்ரோன் பயன்படுத்துவதன் மூலம் மிக துல்லியமாக உரங்களை தெளிக்கலாம் என்றும், வேலை ஆட்கள் தேவையை குறைக்கலாம் என்றும் கூறினார். பின்னர் உலகச் சுற்றுச்சூழல் தினத்தன்று பாரத பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிய "தாயின் பெயரில் ஒரு மரம்" நடும் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் மரக்கன்றுகளை நடவு செய்தனர். மேலும், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இப்கோ சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது .



# மணப்பாறை வட்டாரம் தொப்பம்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தில் கீழ் உழவர்திறள் பெருவிழா

திருச்சி, அக்.5

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தில் கீழ் 2024-25 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தொப்பம்பட்டி கிராமத்தில் கிசான் கோஸ்திஸ் எனப்படும் உழவர்திறள் பெருவிழா நடைபெற்றது. இதில் மணப்பாறை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா தலைமை வகித்தார்.

வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா பேசுகையில், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் சிறப்பு கூறுகளை விரிவாக எடுத்துரைத்தனர். பசுந்தாள் விதையின் விதைப்பு முறைகள், மண்புழு வளர்ப்பு மானியத்தில் வழங்கப்படும். உழவன் செயலின் பயன்பாடுகள் மற்றும் தமிழ் மண் வளம் பற்றியும் மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் பயன்பாடு அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் விரிவாக எடுத்துரைத்தனர். வேளாண்மை அலுவலர் கண்ணன், பயிர் இடுவதின் மூன் மண் பரிசோதணை மற்றும் பாசன நீர் பரிசோதணை செய்வதின் அவசியம் பற்றியும் மற்றும் மண்வள அட்டை அடிப்படையில் உரம் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறினார்.

வேளாண்மைத்துறையில் மத்திய மற்றும் மாநில திட்டங்களில் உள்ள மானியங்கள், பேட்டரி தெளிப்பான், வரப்பு பயிர் இடுவதின் அவசியம் பற்றியும் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும் எடுத்துரைத்தனர்.

வேளாண் பொறியியல் துறையின் உதவிப்பொறியாளர் வயலெட் ஜாய், பொறியியல் துறையின் திட்டத்தில் உள்ள மானியங்கள் சொட்டு நீர் பாசனம் அவசியம், டிராக்டர் மானிய விலையில் உழவு செய்ய உழவன் செயலின் பதிவு செய்ய வேண்டும். பண்ணை குட்டை மானிய விலையில் அமைத்து தரப்படும் என்பதை பற்றியும் விரிவாக விவசாயிகளை எடுத்துக் கூறினார்.

தோட்டக்கலை துறையின் உதவி தோட்டக்கலை அலுவலர் ஜீவா, தோட்டக்கலை துறையில் உள்ள மானிய திட்டங்களை விரிவாக விவசாயிகளை எடுத்துக் கூறினார். நுண்ணீர் பாசன கம்பெனியின் பகுதி மேலாளர் முகமது நியாஸ், சொட்டு நீர் பாசனத்தின் அவசியம் பற்றியும் மற்றும் நுண்ணீர் பாசன அமைக்க தேவைப்படும் அவணங்கள் பற்றியும் விரிவாக விவசாயிகளை எடுத்துக் கூறினார்.

அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்திய சீலன் திட்ட செயல்பாடுகள் கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம், விவசாயிகள் பயிற்சி பற்றி விளக்கி கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் பிரியங்கா பேசுகையில் பாரத பிரதமரின் விவசாயிகளின் கௌரவ நிதி திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகள் அனைவரும் தங்களது விவரங்களை அருகிலுள்ள இ-சேவை மையத்தில் புதுப்பித்தக் கொள்ள கேட்டு கொண்டு நன்றி உரை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை அட்மா திட்ட உழவர் நண்பர் ராமசாமி செய்திருந்தார்.

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா

அரியலூர், அக்.5

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (அட்மா) எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடியில் நவீன வேளாண் தொழில் நுட்பங்களைக் கடைபிடித்து மகசூலை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்கி இலாபம் ஈட்டும் வழிமுறைகள் குறித்த தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்காக மாநில அளவிலான கண்டுணர் சுற்றுலாவிற்கு விவசாயிகள் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் இயங்கி வரும் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர்(பொ) திருவரசன் தலைமை வகித்தார். உழவியல் துறை உதவி பேராசிரியர் ஸ்ரீதர் கலந்து கொண்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார். எண்ணெய் வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், ஆமணக்கு ஆகிய பயிர்கள் சாகுபடியில் மகசூலை அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

நிலக்கடலையில் டி.விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்வது, உயிர் உரங்கள் பயன்பாடு, நீர் நிர்வாகம், களை நிர்வாகம், உர மேலாண்மை, ஜிப்சம் இடுதல், நிலக்கடலை ரிச் தெளிப்பு, ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகள் ஆகிய தொழில் நுட்பங்களை விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். புதிதாக வெளியிடப்பட்டுள்ள நிலக்கடலை இரகங்கள் கிரீனால் – 4 மற்றும் கிரீனால் – 5 ஆகிய இரகங்களிலிருந்து பெறப்படும் எண்ணெய் கொழுப்பு சத்து குறைவானது எனவும், ஆலிவ் எண்ணெயின் தரத்திற்கு நிகரானது எனவும் தெரிவித்தார். அறுவடைக்குப் பின் உலர வைத்து பாதுகாப்பாக சேமிக்கும் தொழில் நுட்பங்கள், எண்ணெய்வித்துப் பயிர்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மதிப்புக்கூட்டி விற்று அதிக இலாபம் பெறம் வழிமுறை, அதற்கென வேளாண் அறிவியல் நிலையங்கள் வழங்கி வரும் பயிற்சிகள் குறித்த விபரங்களையும் தெரிவித்தார்.

எள் சாகுபடியில் மாங்கனீசு சல்பேட் நுண்சத்து இடுதலின் அவசியம், வெள்ளை எள் சாகுபடி முறைகள் குறித்து விளக்கினார். பின் விவசாயிகளை அங்கு அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை வல்லுநர் விதை, ஆதார விதை மற்றும் சான்று விதை உற்பத்தி செய்யப்படும் விதை உற்பத்தி திடல்களுக்கு அழைத்துச் சென்று விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. உயர் விளைச்சல் வீரிய ஒட்டு இரக ஆமணக்கு டிஎம்விசிஎச்–1 சிறப்பம்சங்கள் குறித்தும் டிஎம்வி 1 இரக உளுந்து சிறப்பம்சங்கள் குறித்தும் விளக்கினார். உதவி வேளாண் அலுவலர் ஜானகிராமன், நிலக்கடலை சாகுபடியில் பயன் படுத்தப்படும் பண்ணைக் கருவிகளை விவசாயிகளை பார்வையிடச் செய்து அவற்றின் பயன்பாடு குறித்து விளக்கினார்.

இக்கண்டுணர் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ் மற்றும் உழவர் நண்பர் மோகன், முன்னோடி விவசாயி கருணாகரன், கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வரும் பிச்சனூர் மற்றும் அய்யப்பநாயக்கன் பேட்டை கிராம விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் தா.பழூர் வட்டார விவசாயிகள் இக்கண்டுணர் சுற்றுலாவில் கலந்து கொண்டனர்.